## சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 231/2024 ஜெயபாலன் (பிசா 1) தேதி: 17.02.2026 .**

**பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தீப்பட்டி ஆபிஸ் நடத்தி வருகிறேன். நான் பி.எஸ்.சி படிப்பு படித்துள்ளேன். எனக்கு தற்போது 77 வயது நடக்கிறது. இந்த வழக்கு எதற்காக வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். 67 பிரதிவாதியால் நாடார் உறவின் முறை சங்கத்திற்கு நடந்த தேர்தல் சங்க துணை விதிகளின்படி நடைபெறவில்லை என்றும், அந்த தேர்தல் செல்லாது என்றும் வாதிகள் பரிகாரங்கள் கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் உறைவின் முறை சங்கத்தில் 1985ம் வருடம் முதல் உறுப்பினராக உள்ளேன். மேற்படி சங்கத்தில் எனது தகப்பனாரும் உறுப்பினராக இருந்தார். எனது தந்தை சுப்பையா தன்னை நொடித்தவர் என விளம்புகை செய்ய பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அவர் நொடித்தவர் என விளம்புகை செய்யப்பட்டார் என்றால் அது தவறாகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாதிகள் பிராதுடன் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணம் மற்றும் துணை விதிகள் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நாடார் உறவின் முறை சங்கத்தின் துணை விதிகள் என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.சா.ஆ.2** ஆக குறீயிடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்திற்கும் வாதிகள் பிராதுடன் தாக்கல் செய்துள்ள 1வது ஆவணத்திற்கும் என்ன வித்தியாசம் என்றால் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் ஒரு விதி கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. 4 வது பக்கத்தில் உள்ள (i) என்ற விதி கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. அந்த (i) என்ற விதி உறவின் முறை சங்க துணை விதிகளில் இருந்தது கிடையாது. பி.சா.ஆ.2 வில் 4 வது பக்கத்தில் 12 வது பாராவில் (i) என்ற விதி கிடையாது. பி.சா.ஆ.2 ன்படி தான் நாடார் உறவின் முறை சங்கம் செயல்பட்டு வருகிறது என்றால் செயல்பட்டு வந்தது. பி.,சா.ஆ.2 துணை விதிகள் தற்போது நடைமுறையில் இல்லை. ஏன் என்றால் 2016ம் வருடம் உறவின் முறை சங்கத்திற்கு புதிய துணை விதிகள் நடைமுறைக்கு வந்து விட்டது. அந்த புதிய துணை விதிகள் 2016

ம் வருடம் நடைமுறைக்கு வந்தது என நினைக்கிறேன், சரியாக எனக்கு நியாபகம் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணம் தான் நான் கூறும் புதிய துணை விதிகள் என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் 27.03.2016 பொது மகா சபையின் திருத்தப்பட்ட விதிகள் உட்பட என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ1ல் கண்ட துணை விதிகள் எந்த தேதியில் இருந்து அமலுக்கு வந்தது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நான் தற்சமயம் நாடார் உறவின் முறை சங்கத்தின் செயலாளராக இருந்து வருகிறேன். உறவின் முறை சங்கத்திற்கு 67 பிரதிவாதி தேர்தல் நடத்தி அந்த முடிவின் படி சங்கத்தின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு நான் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2017 ம் வருடம் முதல் 2020ம் வருடம் வரை சங்க செயலாளராக இருந்தேன். அதன்பின்னர் சங்கத்திற்கு 2022ம் வருடம் வரை தேர்தல் நடந்து முடியும் வரை நான் தான் செயலாளராக இருந்தேன் என்றால் சரிதான். 2017 ம் வருடத்திற்கு முன்பு நான் நாடார் உறவின் முறை சங்கத்தில் பொறுப்பு ஏதுவும் வகிக்கவில்லை, ஆனால் 2017 ம் வருடம் நாடார் மேல்நிலைப்பள்ளி நிர்வாக குழுவில் செயலாளராக இருந்தேன். நான் நாடார் உறவின் முறை சங்கத்தில் எந்த வருடத்தில் இருந்து ஏதாவது ஒரு பொறுப்பில் இருந்து வருகிறேன் என்றால் வருடம் எனக்கு நியாபகம் இல்லை. சுமார் 40 வருடங்களாக நாடார் உறவின் முறை சங்கத்தில் நான் ஏதாவது ஒரு பொறுப்பில் இருந்து வருகிறேன் என்றால் 14 வருடங்களாக மட்டுமே அவ்வாறு இருந்து வருகிறேன். அதனால் சங்கத்தின் துணை விதிகள் சீர்திருத்தம் செய்வதற்கு என்ன நடைமுறை, திருத்தப்பட்ட துணை விதிகளை அடுத்து செயல்படுத்துவதற்கு என்ன நடைமுறை போன்ற விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் எனக்கு ஓரளவிற்கு தெரியும். உறவின் முறை சங்கம் சம்பந்தமாக இந்த வழக்கு தவிர உயர் நீதிமன்ற உட்பட ஏனைய நீதிமன்றங்களில் வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி சங்கம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சங்கத்தின் பதிவாளர் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டிருந்தார் என்றால் எனக்கு தெரிந்து ஒரு வழக்கில் அவர் தரப்பினராக சேர்க்கப்பட்டிருந்தார். மேற்படி வழக்குகள் சங்கத்தில் செயலாளர் என்ற முறையில் எனது மேற்பார்வையில் தான் நடந்தது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் சங்கத்தின் பதிவாளர் 2ம் எதிர்மனுதாரராக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஆவணத்திலும் சங்கத்தின் பதிவாளர் 2ம் எதிர்மனுதாரராக

காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.8 ஆவணத்திலும் சங்கத்தின் பதிவாளர் 1ம் எதிர்மனுதாரராக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.